**விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**பிறப்பிப்பவர் : திரு.ஜெ.மேகநாத ரெட்டி,இ.ஆ.ப.**

---

ந.க.எண். ப்பி3/3078/2018 நாள்: 16.02.2022

பொருள்: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி அலகு - விருதுநகர் மாவட்டம் - கருணை அடிப்படையில் பணிநியமனம் - செல்வன்.வி.கண்ணன், ஊர்நல அலுவலர் நிலை-2 - நரிக்குடி ஊராட்சி ஒன்றியம் - இளநிலை உதவியாளர்/ஊர்நல அலுவலர் நிலை-2 பணியிட நிலையில் 13.11.2019 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. செல்வன்.வி.கண்ணன், த/பெ.திரு.து.விஜயகுமார்(லேட்) என்பவரின் விண்ணப்பம் நாள்.28.12.2017
2. திருமதி.வி.சித்ரா, க/பெ.விஜயகுமார்(லேட்) என்பவரின் விண்ணப்பம் நாள்: 14.02.2018, மற்றும் 22.04.2019
3. விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.ப்பி3/3098/2018, நாள்: 09.11.2019
4. அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை (க்யூ1) துறை நாள்:26.02.2021
5. சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.18355/2021/டி2 நாள்:18.12.2021 (அரசுக்கடித எண்.6895/இ3/2021-5 நாள்:14.12.2021 இணைத்து வரப்பெற்றது)

*****

**ஆணை:**

விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகு நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து 24.09.2017 அன்று பணியிடைக்காலமான திரு.து.விஜயகுமார் என்பவரின் வாரிசுதாரரான அவரது மகன் செல்வன்.வி.கண்ணன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பார்வை(3)ல் காணும் நடவடிக்கைகளின்படி பணிநியமனம் வழங்கி உத்தரவிடப்பட்டது. இதனடிப்படையில் தனியர் செல்வன்.வி.கண்ணன் என்பவர் விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராக 13.11.2019 முற்பகலில் பணியில் சேர்ந்துள்ளார்.

பார்வை(4)ல் காணும் அரசாணையில், 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத பணியாளர்களுக்கு சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள், அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், பார்வை(5)ல் காணும் அரசுக்கடிதத்தில், இளநிலை உதவியாளர் பதவிக்கான பணிநியமன அலுவலர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) என்ற நிலையில், மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பணிநியமனம் வழங்கப்பட்டிருப்பினும் , மாவட்ட ஆட்சித் தலைவர்களே இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கிட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் செல்வன்.வி.கண்ணன், ஊர்நல அலுவலர் நிலை-2 என்பவரது பணியினை இளநிலை உதவியாளர்/ஊர்நல அலுவலர் நிலை-2 நிலையில் 13.11.2019 முற்பகல் முதல் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. தனியர் எவ்வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் உள்ளார் என்ற அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை (க்யூ1) துறை நாள்:26.02.2021-ல் பத்தி 5.1 மற்றும் 5.2-ன்படி வரன்முறை செய்யப்பட்டுள்ளது. விதித்தளர்வு அல்லது விதி விலக்கு தேவையென பின்னர் தெரிய வந்தால் இவ்வாணை எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

(11/12)

மாவட்ட ஆட்சியருக்காக,
விருதுநகர்.

பெறுநர்:

செல்வன்.வி.கண்ணன்,
ஊர்நல அலுவலர் நிலை-2,
நரிக்குடி ஊராட்சி ஒன்றியம்.
(அலுவலகத் தலைவர் மூலமாக)

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ/கி.ஊ),நரிக்குடி ஊராட்சி ஒன்றியம்.

நகல்: இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்ககம், சென்னை -15.

நகல்: "ப்பி3" பிரிவு.

ந.க.எண். அ1/0435/22 நாள்: .02.22
நகல் சார்பு செய்யப்படுகிறது.

Block Development Officer (B.Pt)
Narikudi.

பெறுநர்:
செல்வன்.வி.கண்ணன்
ROW-II